


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 06.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்















## இந்திய நிகழ்வுகள்

- வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு சார்பாக, **இந்தோ – பிரான்ஸ் முதலீட்டுகளுக்கான முதல் மாநாடு நாக்பூரில்** நடைபெற்றது. இம்மாநாட்டில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை தொடர்பான **12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்தியா – பிரான்ஸ்** இடையே கையெழுத்தாகியுள்ளன.
  - இந்த ஒப்பந்தத்தின் மூலம் **புதிய வேலைவாய்ப்புகள்** உருவாக்கப்படவுள்ளது.

- **இந்தியாவில்** முதன் முறையாக, **பைக் ஆம்புலன்ஸ் சேவை, ஜார்கண்ட்** மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆம்புலன்ஸ் மேற்பகுதியை எளிதாக மடிக்கக்கூடிய வசதி, இருபுறமும் முதலுதவிப் பெட்டி மற்றும் எச்சரிக்கை ஒலி எழுப்பும் வசதியும் உள்ளது.
  - இந்த ஆம்புலன்ஸ் சேவையானது நக்சலைட்களால் அதிகம் பாதிக்கப்பட்ட ஜார்கண்ட் மாநிலப் பகுதிகளில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

- நாட்டின் **25வது உயர்நீதிமன்றமானது**, ஆந்திர மாநிலத்தின் தலைநகரான **அமராவதியில்** அமைக்கப்பட உள்ளதாக உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆந்திரா, தெலுங்கானா, மாநிலங்கள் இரண்டாக பிரியும் வரை உயர்நீதிமன்றம் ஹைதராபாத்தில் செயல்பட்டு வந்தது. **2014ம்** ஆண்டு இருமாநிலங்களும் பிரியும் போது **ஹைதராபாத் தெலுங்கானா மாநிலத்துடன் இணைந்தது.**
  - இதனையடுத்து ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கான புதிய உயர்நீதிமன்றம் தற்போது அமைக்கப்பட்டு வருகிறது.

- மாசுபடுத்தும் நடவடிக்கைகள் பற்றி கண்காணித்து, அறிக்கை தயார் செய்து அதன் மீது துரிதமான நடவடிக்கை எடுக்கும் நோக்கில் டெல்லியில், **நவம்பர் 1, 2018 முதல் நவம்பர் 10 வரை** ஒரு தீவிரமான தூய காற்றுக்கான பிரச்சாரத்தை **மத்தியச் சுற்றுச்சூழல் துறை அமைச்சரால்** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- உலகின் மிகப்பெரிய வர்த்தக மாநாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ள,

"**சிங்கப்பூர் பின்டெக்**" என்ற மாநாடு **சிங்கப்பூரில் நவம்பர் - 12 முதல் நவம்பர் - 16** வரை நடைபெற உள்ளது.

  - இம்மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையுரை ஆற்ற உள்ளார். இம்மாநாட்டில் சுமார் 100 நாடுகளைச் சேர்ந்த 30,000 பேர் பங்கு பெற உள்ளனர்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **பிரான்ஸ்** நாட்டின் பாரீஸ் நகரில் நடைபெற்ற 2018ம் ஆண்டிற்கான பாரீஸ் மாஸ்டர் டென்னீஸ் தொடரில், (Rolex Paris Masters Tennis Tournament), **ரஷ்யாவின் கரேன் கச்சனோ**, 2ம் நிலை வீரரான, செர்பியாவைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச் - ஐ (Novak Djokovic) வென்று முதல் முறையாக **பாரீஸ் மாஸ்டர் பட்டத்தை** கைப்பற்றியுள்ளார்.

## விருதுகள்

- **2015 மற்றும் 2016** ஆகிய ஆண்டுகளில் **புதிதாகப் பிறந்த குழந்தைகளின் இறப்பு விகிதத்தை** (Neonatal Mortality Rate – NMR) வருட சராசரியில் அதிக அளவில் குறைத்த சாதனைக்காக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்திடம் இருந்த தமிழ்நாடு, சிறப்பு விருது ஒன்றை பெற்றுள்ளது.
  - மத்திய அமைச்சகமானது அசாமின் காசிரங்காவில் நடைபெற்ற "இந்தியாவில் பொது மருத்துவ துறையில் சிறந்த மற்றும் பின்பற்றக்கூடிய நடைமுறைகள் மற்றும் புதுமைகள்" என்பதன் மீதான 5வது தேசிய மாநாட்டில் சிறப்பாக பணியாற்றிய மாநிலங்களுக்கு விருதினை வழங்கியது.

## நியமனங்கள்

- மத்திய அரசானது சென்னை உயர்நீதி மன்றத்தின் கூடுதல் நீதிபதிகளான **RMT. தீகா ராமன், N. சதீஷ் குமார் மற்றும் N. சேஷசாயி** ஆகியோர்களை **நிரந்தர நீதிபதிகளாக** நியமித்துள்ளது.

## முக்கிய தினங்கள்



We Shine Academy™

- **பத்திரிக்கையாளர்களுக்கு** எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளை தடுப்பதற்கான **சர்வதேச தினம் - நவம்பர் 2**
    - ஊடகவியலாளர்களுக்கு எதிரான கடுமையான குற்றங்களில் அளிக்கப்படும் உலகளாவிய குறைவான தண்டனைகள் பற்றிய கவனத்தை ஈர்ப்பதற்காக, ஆண்டுதோறும் நவம்பர் 2 அன்று பத்திரிக்கையாளர்களுக்கு எதிரான குற்றங்களில் வழங்கப்படும் தண்டனைகளில் இருந்து பெறப்படும் விலக்குகளை தடுப்பு தினமாக ஐ.நா. சபையால் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
    - இவ்வருட சர்வதேச தினத்தையொட்டி ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பானது, பணியில் கொல்லப்படும் பத்திரிக்கையாளர்கள் விவகாரத்தின் மீதான விழிப்புணர்வைப் பெரிதாக்க “உண்மை எப்பொழுதும் சாகாது” என்ற பரப்புரையைத் தொடங்கியுள்ளது.

We Shine Academy™